அனுப்பப்பெறும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்காணும் விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு காங்கிரஸ் கட்சி சட்டமன்ற குழுத் தலைவர், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட முக்கிய அழைப்பாளர்கள் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு 20–7–2019 அன்று பிற்பகல் 4–30 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த அரசினர் சட்டமுன்வடிவுகள் மற்றும் ஏனைய அரசினர்அலுவல்கள் 20–7–2019 அன்று மானியக் கோரிக்கைகளின் விவாதம், பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு ஆகியவை பிற்பகல் 2–00 மணிக்கு முடிவுற்ற பின்னர் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதை பேரவையின் ஒப்புதலுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

நண்பகல் 12–00

6. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்–*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*